# செந்தமிழ்

பகுதி : 10
தொகுதி : 97
அக்டோபர் 2003

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
தோற்றம் 21.03.1867

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# செந்தமிழ்


பகுதி : 10
தொகுதி : 97
அக்டோபர் 2003

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034





மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம். மதுரை – 1.

# பொருளடக்கம்


பேராசிரியருக்கு முத்து விழா 343

கார்மேகக்கோன் தான் வாழ்க! 345
*பேராசிரியர் கி.இளங்கோவன்*

திருவெம்பாவை 17 349
*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

போலித்தனம் நெருங்காதிருக்க! 352
*முனைவர் அ.சிவக்கண்ணன்*

இலக்கியங்களின் வரையறையில்
"கற்பு" ஓர் ஆய்வு 355
*பேராசிரியர் க.கு.பன்னீர்செல்வம்*

தொல்காப்பிய இலக்கியக் கொள்கை (அகம்) 365
*முனைவர் பெ.சுயம்பு*

# பேராசிரியருக்கு முத்து விழா

பேராசிரியர் நா.பாலுசாமி அவர்களுக்கு எண்பது அகவை நிறைவுற்றதைப் போற்றி நல்ல உள்ளங்கள் 20.10.2003 திங்களன்று மதுரை நகர்மன்றத்தில் விழா எடுத்து மகிழ்ந்தது. அவருடைய மாணவர்கள் உடன் பணிபுரிந்த அறிஞர் பெருமக்கள் எல்லோரும் திரண்டு கூடிய காட்சி கண் நிறைந்த இனிய அனுபவம்.

மதுரை மாநகரில் அருட்செல்வம் எல்லோருக்கும் கிடைக்க தன் பொருட்செல்வத்தை வாரி வழங்கும் செல்வர் அக்ரினி மேலாண் இயக்குநர் சீத்தாராம் விழாவுக்குத் தலைமையேற்றுப் பொற்கிழி வழங்கினார்கள். அருளும் பொருளும் ஒரு சேரப் பெற்ற கலையன்னை கருமுத்து இராதா தியாகராசன் அவர்கள் முன்னிலை வகித்துப் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள். அவர்கள் அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தராக விளங்கியவர்கள் இந்நாளில் மதுரையில் தியாகராசர் கல்லூரியை ஒரு பல்கலைக் கழகம்போல் நடத்தி வருகிறார்கள்.

தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் பேராசிரியர் கதிர் மகாதேவன், பட்டிமன்றப் புகழ் பேராசிரியர் சாலமன் பாப்பையா ஆகிய இருபெரும் பேராசிரியர்களும் பேராசிரியர் நா.பாலுசாமியின் அருங்குணங்களையும் நீண்ட நெடிய தமிழ் வாழ்க்கையையும் நினைவு கூர்ந்தார்கள். திருக்குறட் செம்மல் ந.மணிமொழியன் வாழ்த்துரை வழங்கியதோடு விழாவில் கலந்துகொண்ட சான்றோர் பெருமக்களுக்கு விருந்து அளித்துப் போற்றினார்கள். நகர் மன்றச்செயலர் பேராசிரியர் ஐ இசுமாயில் வாழ்த்துரை வழங்க மனிதத்தேனீ சொக்கலிங்கம் வரவேற்க பேராசிரியர் இராசாகோவிந்தசாமி நன்றி நவில அறிஞர் ச.செந்தூரன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள். வானகம் வாழ்த்த வான் பூ மாரி பெய்தது.

பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டக்களம் வீறுகொண்டிருந்த நாட்களில் 10.07.1923இல் திருச்சுழிக்கு அருகில் வேடநத்தம் என்னும் சிற்றூரில் பிறந்து கமுதியில் பள்ளிக் கல்வி பயின்றார். சிறுவயதில் கூர்மாவதாரக் கோனாரிடத்திலும் பின்பு அமெரிக்கன் கல்லூரியில் பேராசிரியர் கார்மேகக் கோனாரிடத்திலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பெரும் புலவர் அப்பனய்யங்கார் போன்ற சான்றோர்களிடத்திலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பயிலும் பெரும்பேறு பெற்றார். பிற்காலத்தில் உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப் புலவரின் அருகிருந்து தமிழ்ப் பணி செய்யும் பேறும் பெற்றார். பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் தம் இருபத்தி மூன்றாம் அகவையில் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப்பணியில் சேர்ந்து பின்பு தியாகராசர் கல்லூரியில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பேராசிரியராகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழித்துறைத் தலைமைப் பேராசிரியராக மூன்று ஆண்டுகளும் வாழ்வியல் களஞ்சியம் பதிப்பாசிரியராகத் தமிழ்ப்பல்கலைக் கழகத்திலும் பணியாற்றித் தமிழ்த் தெய்வத்தை வழிபட்டு வருகிறார்கள். மொத்தத்தில் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பணியாற்றிய பெருமையுடைய பெருமகனாராவார்.

பேராசிரியர் நா.பா. அவர்கள் மணிமேகலை கம்பராமாயணம், திருக்குறள் பரிமேலழகர் போன்ற நூல்களில் ஆய்வும் தோய்வும் உடையவர். கேட்பார் பிணிக்கும் சொல் வல்லார். பிறர் நலம் கண்டபோதெல்லாம் அன்பு மேலீட்டால் பாராட்டும் இயல்புடைய பண்பாளர். நற்பொருளைக் கேட்பதிலும் கற்பதிலும் எழுதுவதிலும் எண்பது வயது இளைஞர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மேதகு பேராசிரியர்; செந்தமிழ் நூலகம் சீர்பேணும் அறிஞர்; தமிழ் நலம் கனிந்த சான்றோர். சொல்லும் செயலும் மதுரைத் தமிழ்ச் சங்கம் வெல்லும் வகை நாட்டும் கல்வி வல்லார். பல்லாண்டு பல்லாண்டு தமிழ்த் தாய்க்குப் பணிகளாற்றி இன்புற்று இளைஞராய்ப் பேராசிரியர் நா.பா. அவர்கள் இனிது வாழ அங்கயற்கண்ணி தன்னோடும் அமர்ந்து அருளும் ஆலவாய் அண்ணல் அடிவழுத்தி வாழ்வாம்.

# கார்மேகக்கோன் தான் வாழ்க!

*பேராசிரியர் கி. இளங்கோவன்*

மின்னி, முழங்கி, மேகம் கருவிருந்து, மண்ணில் மழை கொட்டி, மகிழ்விக்கும் கார்மேகம்போல் தமிழ்மேகம் ஒன்று தடையற்ற அருவி எனத் தமிழகம் எங்கும் தமிழ்மழை பொழிந்தது. செந்நாப்புலவர் பேராசிரியர் ஆ.கார்மேகக் கோனார் அவர்களே அந்தத் தமிழ்மேகம்.

பேராசிரியர் அவர்கள் சேதுநாட்டிலே தோன்றிச் செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநகரிலே அமைந்துள்ள தமிழ்ச்சங்கத்தில் பயின்று, புலமை பெற்றுத் தமிழ்நாடு முழுவதும் தமிழ்ப்பயிர் வளர்த்த பெரியார் ஆவார். சொல்வன்மை, அஞ்சாது உண்மை உரைக்கும் நெஞ்சமுத்தம், ஆழ்ந்த சங்க நூற்பயிற்சி ஆகிய முப்பெரும் பண்புகளே இவரது வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

பேராசிரியர் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களில் ஒருவர், புலத்துறை முற்றிய இக்கால நக்கீரர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் 1914 முதல் 1951 வரை (37 ஆண்டுகள்) தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றிய அறிஞர். மிக இளம் வயதிலேயே ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவர்கள். இவர்கள் அப்பணியை ஏற்றுக்கொண்ட காலம், தமிழும் தமிழைக் கற்பிப்போரும் எள்ளி நகையாடப்படும் பொருட்களாக எண்ணப்பட்ட காலம். சாக்கடை முத்துப்புலவர் என்று பிரதாப சந்திரவிலாசமும், ஆடுசாபட்டி அம்மையப்பிள்ளை என்று கமலாம்பாள் சரித்திரமும் தமிழ்ப்புலவர்களைக் காலத்தோடு இணைந்து போகும் திறமற்றவர்களாய்க் காட்டிக் கேலி செய்த காலம் அது. ஆனால் நம் பேராசிரியர் மட்டும் அந்நாட்களில் கூட அனைத்துத் துறையினரின் இதயத்திலும் ஓர் தனி இடம் பெற்றார்கள். அந்தக்காலத்தில் பேராசிரியர் அவர்கள். வகுப்பிற்கு வருவதற்கும் முன்னரே, ஆங்கில வகுப்பிற்குக் கூடச் செல்லாத, வராத மாணவர்கள் உள்பட அனைவரும் வந்து அமைதியாய் இருந்து கேட்கும் காட்சி வியக்காமலிருக்க

முடியாது. இதனால் இப்பேராசிரியர் அவர்களால் தமிழே தன் இயல்பான புகழில் நிமிர்ந்தது, சிறப்புப் பெற்றது எனலாம்.

ஆராய்ச்சித் திறமையும் அளவற்ற புலமையும் உடைய இவர்கள் கல்லூரிக்கு வரும் தோற்றமே கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். தம் பெயருக்கு ஏற்பக் கரிய மேலங்கியணிந்து கார்மேகமே வருவது போன்று தோற்றமளிப்பார். வீரத்தமிழனின் விளங்கு மீசையுடன் நெற்றியில் நாமம் துலங்க அழகிய தோற்றத்துடன் ஆசனத்தில் அமர்வார். ஒரு குண்டூசி விழுந்தாலும் கேட்கக்கூடிய அமைதி வகுப்பில் நிலவும், அவர்கள் கற்பிக்கும் திறன் தனிவகையைச் சார்ந்தது. பாடலின் விரிவுரையும், இலக்கண விளக்கமும், இலக்கிய நயங்களும் தெள்ளத் தெளிய மாணவர்களது உள்ளத்தில் பதிய எடுத்து உரைப்பார்கள். வகுப்பில் காலம் கழிவதே தெரியாது. இலக்கியத்தில் இனிமையையே அறியாதவருக்குங்கூட இனிமையை உண்டாக்கி இன்பத்தில் திளைக்கச் செய்வார்கள்.

நம் பேராசிரியர் உண்மையுரைப்பதில் யாருக்கும் அஞ்சாது, நெஞ்சுரங்கொண்டு பேசித் தமிழாசிரியர்களது மானம் காத்த நிகழ்ச்சிகள் பல உண்டு. 1928 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கல்வி அதிகாரியாக இருந்த கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் ஓரளவு தமிழறிவும் வாய்ந்தவர். இவர் தம்மைப் போன்றவர்களைப் பல்கலைக்கழகச் சொற்பொழிவுக்கு அழைக்காது, தமிழாசிரியராகிய நம் பேராசிரியரை அழைத்ததற்கு மனக்காழ்ப்புக் கொண்டிருந்தவர். இவர் நம் பேராசிரியரை ஒருமுறை சந்திக்க நேர்ந்தபோது பேச்சுக்கிடையில் இவரது ஆராய்ச்சி ஆழத்தைக் கண்டறியக் கருதித் "தொல்காப்பியர் எத்தகைய தாவரத்தை மரமெனக் கூற வேண்டும் என்று சொல்கிறார்." என்று திடீரென ஒரு வினாவை விடுத்தார்.

நம் பேராசிரியர் அவர்கள் காலந்தாழ்க்காது உடனே

"புறக்காழ னவே புல்லென மொழிப
அகக்காழ னவே மரமென மொழிப"

என்ற தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டி உள் பொய்யாய், வெளி வயிரமுடையவற்றைப் புல்லினமாகக் கூற வேண்டும், நெல்லும், மூங்கிலும், பனையும், தென்னையும் எல்லாம் புல்லினமே. அகக்காழ்ப்பு (காழ்) உடையவற்றை மரமெனக் கூற வேண்டும். அகக்காழ் என்பது உள்வயிரம், புளி, ஆச்சா, வாகை முதலியன மரமெனக் கூறப்படும் என்று விளக்கமாக விடையிறுத்தார். இதனைக் கேட்ட கல்வி அதிகாரிக்குத் தமிழாசிரியர்களைப் பற்றி எளிமையாக எண்ணியிருந்த எண்ணம் அன்றோடு குறைந்திருக்கும் என்பது ஐயமில்லை.

"புலவர் காய்ச்சல்" என்பதைப் புறங்கண்ட இப்பேராசிரியர் அச்சத்தையும் புறங்கண்டவராவர், தவறு என்று தமக்குப் பட்டதைச் சிறிதும் அஞ்சாமல் வெளியிடும் ஆற்றல் பெற்ற தமிழறிஞருள் தலைசிறந்தவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரும் பேராசிரியருமே ஆவர். ஔவையார் வரலாறு திரைப்படமாகியது. புலமையிலும் அரசியல் அறிவிலும் பண்பட்டு விளங்கிய ஔவையாரும் பெரு நாவலராகிய திருவள்ளுவரும் ஒழுக்கம் தவறிய இருவருக்குப் பிறந்தவர் என்று எழுதப்பட்ட பொய்க்கதையினையும், ஆராய்ச்சிக்குப் பொருந்தாத பிற செய்திகளையும் கொண்டு ஔவையார் வரலாறு திரைப்படமாக்கப்பட்டதை அஞ்சாது மதுரையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் கண்டித்தவர் நம் பேராசிரியரே! இங்ஙனம் தமிழுக்கோ தமிழர் நலத்துக்கோ கேடு எனின் அறிந்தவுடன் எவருக்கும் அஞ்சாமல் பேசும் உள்ளவுரம் இப்பேராசிரியரிடம் காணப்பட்டது போற்றுதற்குரியதாகும்.

1953 ஆம் ஆண்டு சனவரித்திங்கள் மதுரை நடேசையர் படிப்பகத்தின் திறப்புவிழா உரையில் இந்தியக் குடியரசின் அப்போதைய துணைத்தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், படிப்பகத்தின் பயனைப் பற்றியும் அதிலடங்கி இருக்கவேண்டிய நூல்களைப் பற்றியும் குறிப்பிடும்போது, இப்போது உலகப்பெரு நூல்களாக விளங்குவன கீதை, குர் ஆன், பைபிள், சேக்சுபியர் என்பனவே என்று கூறினார்கள். இந்நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றிய கார்மேகனார் தம்

சொற்பொழிவில் "குடியரசின் துணைத் தலைவர் அவர்கள் உலகப்பெருநூல்களாகக் குறிப்பிட்டவற்றுள், நமது திருக்குறளை உலகம் போற்றும் தத்துவப் பேரறிஞர், தம் திருவாயால் குறிப்பிடாமற்போனது நமக்கு மிக்க ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் அளிக்கின்றது" என்று எடுத்துரைத்தார். முடிவுரையில் குடியரசின் துணைத் தலைவரவர்கள், திருக்குறளைக் குறிக்காமல் விட்டுப்போனது பற்றித் தம் வருத்தத்தை அவையோர்குத் தெரிவித்துக் கொண்டார்கள். தன்னை மறந்து, தமிழையே எண்ணிய, அவரது மனத்திண்மைக்கு இது ஒரு சான்றாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 1920 ஆம் ஆண்டு சொற்பொழிவு ஒன்று நடைபெற்றது. அவ்விழாவில் நம் கார்மேகனார் பத்துப்பாட்டில் ஒன்றான "மலைபடுகடாம்" என்னும் இலக்கியம்பற்றி ஓர் ஆராய்ச்சிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கார்மேகனாரது சொற்பொழிவு முடிவு பெற்றவுடன் உ.வே.சாமிநாதையர் அவர்கள் எழுந்து, "இந்த இளைஞரான தமிழ் ஆசிரியர், கடினமான சங்கச் செய்யுட்களில் புகுந்து இத்தகைய ஆராய்ச்சித்திறன் நிறைந்த சொற்பொழிவு நிகழ்த்தியது மிக உவப்பும் வியப்பும் பயப்பதாயுள்ளது. இவரது சொற்பொழிவை இவருடைய தந்தையார் இங்கிருந்து கேட்பின் பெரிதும் உவப்புறுவர்" என்று பாராட்டிப் பேசினார்கள்.

"சேண்அவர் ஒழுக்கத் திறகே! திருஅவர் தமிழர்க் கெல்லாம்,
மாணவர் மனவி ருட்கே அவர்ஒரு சுடர்வி ளக்கு!
வீணவர் தமிழ்ப்பண் பாடு விரும்பார்பால் திரும்பார் நெஞ்சே
காண்அவர் நாட்டுத் தொண்டு! கார்மேகக் கோன்தான் வாழ்க!

என்று புரட்சிக்கவி பாரதிதாசனின் பாமாலை இம்மண்ணில் இருக்கும்வரை, பேராசிரியரின் புகழ்மாலையும் வாடாமல் மணக்கும்.

# திருவெம்பாவை 17

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

அம்பிகை வழங்கிய அருளில் தோய்ந்தும், அம்மையப்பரை ஒருங்கே தரிசித்தும், அவர்தம் அருளில், நீராடி மகிழ்வதுபோல, ஆடி மகிழ்ந்தும் வந்த பாவை மகளிர், பேரின்பத் துறையில் இறுதியாக உள்ள சிவானந்தத்தை - திருவடி இன்பத்தைப் பற்றிப் பாடத்தொடங்குகின்றனர்.

இறைவனை வழிபடுவோரின் பக்குவத்திற்கு ஏற்பவே, பயன்களும் கிடைக்கின்றன. விண்ணுலகில் வாழும் தேவர்கள் உயர்ந்தவர்கள்தாம். படைத்தல் முதலிய மூன்று தொழில்களைச் செய்யும் மூவரும் அவர்களைவிட உயர்ந்தவர்கள்தாம். இவர்கள் முறையே, புண்ணியப் பயனாக வரும் வாழ்க்கை இன்பத்தையும், சிவவழிபாட்டின் பயனாகக் கிடைத்த பதவியில், அதிகாரத்தின் பயனாய் வரும் தன்முனைப்பு இன்பத்தையும் அல்லாமல், வேறு என்ன இன்பம் பெறுகிறார்கள்?

இங்கே, இந்த உலகத்தில், இறைவனிடம் அன்பைப் பெருக்கி, கசிந்துருகிக் கண்ணீர் வடித்து, தம்மை மறந்து நிற்கும் - முனைப்பிழந்த இன்பம் அடியார்களுக்குக் கிடைக்கிறதே. அது தேவர், மூவர்களுக்குக் கிடைக்கிறதா?

தம்முடைய சிறிய இல்லங்களில், எளிய பொருள்களில் இறைவனின் திருமேனியை எழுந்தருளுவித்து, நீராட்டி, ஆடைபுனைந்து, மாலைசூட்டி, மலர்கள் தூவி, அருச்சனை செய்து, அத்திருமேனியை லிங்கப்பெருமானை தொட்டும், தடவியும், பார்த்தும், நினைத்தும், சிரித்தும், கூத்தாடியும் அந்த நினைவிலே ஒன்றியும் வழிபடுகின்ற அடியார்களுக்கு, அதனால் வரும் ஆனந்தம் இருக்கிறதே, அது தேவர்க்கும் மூவருக்கும் உண்டா?

இறைவனின் அருளுக்குப் பாத்திரமாக அவனுக்கு அடிமை செய்யும் தொண்டராய், தோழமை பாராட்டி உரிமை செய்யும் நண்பராய், பரிவிற்கு ஏங்கும் பாலகராய், காதல் செய்யும் காதலியாய் உறவு கொண்டாடி, தம்மை இழந்து, இன்புறுகின்ற

வாய்ப்பு மனிதர்க்குக் கிடைக்கிறதே. இது தேவர்க்கும் மூவர்க்கும் கிடைக்குமா? இல்லை, இல்லை என்கிறார் திருநாவுக்கரசர்.

*"அயிராவணம் ஏறாது, ஆனேறு ஏறி*
*அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட*
*அயிராவணமே, என் அம்மானே"*

என்பது அவர் வாக்கு. சிவபெருமான் அயிராவணம் என்ற சிவலோகத்து யானைமேல் ஏறாமல், எருதின் மீது ஏறி, தேவர் உலகத்தை ஆட்கொள்ளாமல் திருவாரூரை ஆட்கொள் கின்றானாம். மணிவாசகர்,

*"வான் பழித்து இம்மண் புகுந்து மனிதரை*
*ஆட்கொண்ட வள்ளல்"*

என்று கூறுவார்.

தேவரும் மூவரும் அதிகாரம் செய்பவரே அன்றி, ஆட்பட்டவர்கள் அல்லர். அவர்கள் சிவனை வாழ்த்துவது, தாங்கள் வாழவேண்டி. ஆனால் அடியார்கள் அவனை வாழ்த்துவது, வாழ்க்கை ஒழிய வேண்டி. தேவரும் மூவரும் இறைவன் சந்நிதியில் முடிதாழ்த்தி வணங்குவது, தாங்கள் உயர்ந்து, மற்ற யாவரும் தங்களை வணங்க வேண்டி. அடியார்கள் வணங்குவது தங்கள் ஆன்ம போதம் தாழ்ந்து, தாழ்ந்து அற்றுப்போக வேண்டி. மகளிர் சிலர் இறைக்காதலில் கனிந்து கனிந்து நிற்கின்றனர். அவருள் ஒருத்தி வேறு ஒருத்தியைப் பார்த்து, *"வண்டுகள் மொய்க்கும் மகரந்தத்தைக் கொண்ட கோதையை அணிந்த கூந்தலை உடையவளே"*

*"கொங்கு உண் கருங் குழலி"*

என்று அழைக்கின்றார். வண்டு மொய்க்கும் என்ற குறிப்பு, மண்ணுலக மங்கை என்பதைக் காட்டும். அப்பெண் தொடர்கின்றாள்.

"தேவரையும் மூவரையும் விட்டு இறைவன் நம்மை ஆட்கொண்டான். நம் இல்லங்களில் எழுந்தருளினான். அவனுக்கு முன்னே, அவன் கூட்டுறவில், அவன் காட்டிய காதலில், நம்மை மறந்தோம். அவனுடன் ஒன்றிப்போனோம்.

நம்மை அவனிடம் ஒப்புக்கொடுத்து விட்டோம். நமக்கு நன்மையும் அவனே, தீமையும் அவனே என்று சரணடைந்தோம்.

*"கொங்கு உண் கருங்குழலி! நத்தம்மைக் கோதாட்டி*
*இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி"*

நாம் பெற்ற இன்பம், எங்கும் யாரும் பெறாதது, மூவரும் தேவரும் அறியாதது.

*"செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால்*
*எங்கும் இல்லாததோர் இன்பம் நம் பாலதே"*

குற்றம் நீக்கி நம் காதலை - நம்மை ஏற்றுக்கொண்டான் தன்னை நமக்குத் தந்தான். தாமரைக் காடனைய திருமேனியை ஆரத்தழுவி அகமகிழ்ந்தோம்.

*"செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை"*

இம்மை வாழ்விலே திருவடிப்பேறு பெற்றோரைச் சீவன்முத்தர் என்பர். மணிவாசகருக்கு இவ்வுலகமே அருள் உலகமாக மாறிற்று. ஆம், அருள் பெற்ற அவருக்கு அகமும் அருள். புறமும் - புறவுலகமும் அருள்மயம். இறைவன் இவ்வுலகில் செய்யும் அருளாட்சி அப்போது அவருக்கு விளங்கிற்று. விளங்கவே, "அங்கண் அரசை" என்று வியந்து பாடுகின்றார். 'அங்கண்' என்பது அருள் உலகம் என்று பொருள்படும். இதற்கு அரசனாய் நிற்பதுடன், அடியவராகிய தங்களுக்கு எந்நாளும் அருளி இன்பத்தைக் கரவாது தருவான் என்ற பொருள்பட, "அடியோங்கட்கு ஆரமுதை" என்கின்றார். ஆரமுதமாக அவனைப் பெறாதவர்க்கும் அவனே பெருமான், ஆதலால் மணிவாசகர் தாம் பெற்றதை அனைவரும் பெறவேண்டி, ஆன்மநேயத்தால் அவரை எல்லாம் சேர்த்துக்கொண்டு,

*"நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்*
*பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்"*

என்று பாடுகின்றார். நலம் திகழ என்பது, சிவனை வழிபட்டுச் சிவமாய்த் திகழும் நலம் வளர்வதற்காக என்று பொருள்படும்.

# போலித்தனம் நெருங்காதிருக்க!

*முனைவர் அ. சிவககண்ணன்*

நாம் நாமாக இருப்பதைத்தவிர்த்து நம்மை இன்னொருவராக காட்டிக்கொள்ள முயல்வதையே போலித்தனம் எனலாம் ஏழை பணக்காரனைப்போல் காட்டிக்கொள்ள முயல்வது. படிப்பற்றவன் மேதைபோல் நடந்துகொள்ள விழைவது என, இதுபோல் எடுத்துக்காட்டுகளை ஏராளமாகச் சொல்லலாம். சுருக்கமாக, தம்மிடம் இல்லாததை இருப்பதுபோல் காட்டிக்கொள்வதற்கும் மற்றவர்களை அப்படி நம்பவைப்பதற்கும் எடுத்துக்கொள்ளும் முயற்சியே போலித்தனம் எனலாம். இதை ஒருவகையில் ஏமாற்றுவேலை என்றே கூறலாம். இத்தகையவர்களைக் கண்டு மனம் வெதும்பித்தான்

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்" என்று பாடினார் போலும்

உண்மையில் இந்தப் போலித்தனம் வாழ்க்கைக்கு எந்த வகையிலாவது உதவுகிறதா? இல்லை; இது முன்னேற நினைப்பவர்களுக்கு ஒரு சறுக்கல். தாம் எப்படி இருக்கிறார்களோ அப்படியே மற்றவர்களிடம் தம்மை வெளிப்படுத்திக் கொள்கிறவர்களே மாமனிதர்களாகத் திகழ்கிறார்கள். இவர்களே சிறந்த சாதனையாளர்களாகவும் விளங்குகிறார்கள். திரு.வி.கவின் வாழ்க்கை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

சிலர் தம்முடைய வரவேற்பறையில் கணக்கில்லாத புத்தங்களை அடுக்கிவைத்துத் தம்மைப்பெரிய படிப்பாளியாகக் காட்டிக்கொள்ள முயலுகிறார்கள். உண்மையில் அதில் சில புத்தகங்களைக் கூட இவர்கள் தொட்டிருக்கவும் மாட்டார்கள். இன்னும் சிலர் ஆடம்பரமான அழகுப்பொருள்களை அடுக்கி வைத்துத் தம்மைச்சிறந்த கலா ரசிகர்களாக நம்பவைக்க முயலுவார்கள்.

நாடகமேதை பெர்னார்ட்ஷாவின் வீட்டிற்கு வந்த ஒருவர்,

"ஏன் உங்களுக்கு மலர்களைப் பிடிக்காதா? மேசையில் அலங்காரத்திற்கு ஒரு மலர்க்கொத்துக்கூட இல்லையே?" என்றாராம். அதற்கு பெர்னாட்ஷா, "எனக்குக் குழந்தைகளைக் கூடத்தான் பிடிக்கும்; அதற்காகக் குழந்தைகளின் தலைகளை மேசையில் வைத்துக்கொள்ளவா முடியும்?" என்று கேட்டாராம்.

பெரும்பாலானவர்களுக்கு தங்களுடைய வேலையைத் தாங்களே செய்துகொள்வது கௌரவக் குறைச்சலாகப்படுகிறது. சின்னச் சின்ன வேலைக்குக்கூட மற்றவர்களை ஏவுவார்கள்.

ஒருமுறை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம்லிங்கனை அவருடைய நண்பர் சந்தித்தபோது, லிங்கன் தம்முடைய காலணிகளுக்கு 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருந்தார். இதைக்கண்ட நண்பர் அதிர்ச்சியடைந்து "என்ன? உங்களுடைய காலணிகளுக்கு நீங்களா பாலீஷ் போடுகிறீர்கள்" என்றார். ஆபிரகாம்லிங்கன் அமைதியாக," அப்படியானால் நீங்கள் யாருடைய காலணிகளுக்குப் பாலீஷ் போடுவீர்கள் நண்பரே?" என்று கேட்டார்.

பெரிய மனிதர்கள் போலியான அலங்காரத்திற்கும் வார்த்தை ஜாலங்களுக்கும் மயங்குபவர்கள் இல்லை. "தன்னெஞ்சறிவது பொய்யற்க" என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவர்கள். எளிமையின் வலிமையையும் வாய்மையின் ஆற்றலையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர்கள்.

எளிமையாக இருந்தால் மக்களைக்கவர முடியாது என்ற தவரான சிந்தனைதான் சிலரை நிலை தடுமாறிச் செயல்பட வைக்கிறது.

முழங்காலுக்கு மேல் கட்டப்பட்ட வேட்டியும் தோளில் போர்த்தப்பட்ட துண்டுமாக, நாகரிகம் பொங்கிவழியும் இலண்டன் மாநகரத்தில் நடந்த வட்டமேசை மாநாட்டிற்கு 'அரையாடைப்பக்கிரியாக'ச் சென்று வந்த காந்தியடிகளைக் கண்டுதான் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியம் அலறியது

குள்ளமான உருவம்; அடிக்கடி மழிக்கப்படாத முகம்; வெற்றிலைக் கரைபடிந்த பற்கள்; ஏறுமாறாக மாட்டப் பட்ட

பொத்தான்களுடன் அக்கறைகாட்டப் படாத சட்டைவேட்டி, இவற்றிற்கெல்லாம் சொந்தக்காரர் மறைந்த தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா ஆவார் அவருடைய பேச்சைக் கேட்பதற்குப்பட்டி தொட்டிகளிலிருந் தெல்லாம் மக்கள் சாரை சாரையாகப் படையெடுப்பார்களே! எளிமை மதிக்கப்பட வில்லையென்றா இதற்குப் பொருள்?

இப்படி இப்படியெல்லாம் ஆடை அணிந்துகொண்டால்தான் மதிப்பார்கள்; பொன்னும் மணியும் பூட்டிக் கொண்டால்தான் கெளரவம் என்பதெல்லாம் நாமாகக்கற்பனை செய்துகொள்ளும் வேண்டாத நியதிகள்தான். என்றைக்குமே தலைக்குள் இருப்பதற்குத்தான் மதிப்பு இருந்துவருகிறது; உடலுக்குமேல் போர்த்தப்பட்டவைகளுக்கு இல்லை என்பதற்கு சாக்ரடீஸ் முதல் திரு.வி க. வரை உண்மை, உண்மை.

இத்தகைய போலித்தனமான போக்குகளே இன்றைக்கும் சமூகத்தை அலைக்கழிக்கும் நோயாக இருக்கிறது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் இந்தப் போலித்தனம் நம்மை நெருங்கவிடாமல் தடுத்துக்கொள்வதோடு இளைய சமுதாயத்தினரையும் போலித்தனத்திடமிருந்து காப்பதுதான்.

# இலக்கியங்களின் வரையறையில் "கற்பு"

## - ஓர் ஆய்வு

*பேராசிரியர் க.கு.பன்னீர்செல்வம்*
*பெருந்துறை, ஈரோடு.*

முன்னுரை:

தமிழிலக்கியத்தின் நெடுவழிப்பாதையில் ஒரு மைல்கல்லாக இருப்பது அகத்துறை இலக்கியம். இத்தகைய இலக்கியத்தை ஆக்கிய புலவர்கள் காலத்தை வென்று நிற்பவர்கள். மேலை தேசத்துப் பண்பாட்டுப் புதுமையை ஏற்றுக்கொண்ட தமிழர்கள், அகத்துறை இலக்கியக்கோட்பாடுகளை தவறவிட வில்லை என்றே கூறலாம். இலக்கியம் ஓரின மக்களுக்காக மட்டும் படைப்பதுமில்லை வாழ்வதுமில்லை. ஒரு கால ஓட்டத்தில் வாழும் மக்களுக்குப் படைக்கப்பட்ட போது வாழ்ந்த இலக்கியம், அம்மக்கள் மறைந்த போதும் மறையாது என்றும் நிமிர்ந்து நிற்பது இலக்கியம். அவற்றில் ஒருவகைதான் அகத்துறை இலக்கியம். உலக மொழிகளில் கூறப்படும் கருத்துக்கள் அம்மொழியின் செல்வாக்கினால் மதிப்புப் பெறுவதுண்டு. தனிமனித சிந்தனையாக அன்றி மனித சமூகத்தின் சிந்தனைகளை வெளிக் கொண்டுவரவும், பண்பாட்டு நெறிமுறைகளை படைத்தளிக்கவும் மொழி பயன்பட்டது. அத்தகைய மொழியாகிய தமிழின் தனிச்சிறப்பைக் கூறுகின்ற தமிழரின் 'கற்பு' (Chastity) நெறியைப்பற்றி இலக்கியங்கள் கூறுவதை இங்கே ஒரு சிற்றாய்வாகக் கொள்ளப்படுகிறது.

வாழ்வின் நோக்கம்:

பழந்தமிழர், சமூகத்தைப்பற்றிய கருத்துக்களைத் தாம் உருவாக்கிய இலக்கியங்களிலே கூறிச் சென்றுள்ளனர். பண்டைய இதிகாசங்களும், தனிப்பாடல்களும், காவியங்களும், புராணங்களும் தனிமனித வாழ்வு நெறிகளையும் சமூக வாழ்வு

நிலைகளையும் எடுத்துக்கூறியுள்ளன. மனித வாழ்க்கையின் நோக்கம் எது என்பதை அறிய இலக்கியங்கள் உதவுகின்றன. சங்கப்பாடல்களிலே தனிமனித வாழ்வு விளக்கமாகக் கூறப்படுகின்றது. ஆனால், அத்தனிமனித வாழ்வு பற்றிக் குறிப்புகள், மனித சமூக அமைப்பிலே அக்காலகட்டத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் அப்பாடல்கள் காட்டுகின்றன. குடும்ப நிலையிலே சிறப்பாக ஆணும் பெண்ணும் பெற்றிருந்த நிலையைச் சங்கப்பாடல்கள் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டியதும் அக்காலத்தின் தேவையாக இருந்திருக்க வேண்டும். ஆணும் பெண்ணுமாக ஒன்றிணைந்து 'குடும்பம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கியபோது அவ்வமைப்புக்கான சில ஒழுங்கு முறைகளையும் திட்டமிட வேண்டியிருந்தது. விலங்குகளைப் போலன்றி சில நுட்பங்களைச் சிந்தித்துச் செயல்பட வேண்டியிருந்தது. ஒழுக்க நிலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடற்ற விதிமுறைகளையே பழந்தமிழர் பேணி வந்துள்ளனர். குடும்பம் என்ற அமைப்பின் நிலைப்பாட்டிற்கு சில ஒழுக்கவிதிகள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

சங்க இலக்கியத்தில் 'தலைவன்', 'மனையாள்' என்ற சொற்கள் முறையே ஆணையும், பெண்ணையும் குறிக்கின்றன. ஊரன், நாடன், துறைவன் போன்ற சொற்கள் ஆணைக்குறிக்கும் சொற்களாகப் பாடல்களிலே வந்துள்ளன. பெண், வீட்டிலிருந்து குடும்ப அமைப்பினைப் பேணுபவளாகவும், ஆண் வெளியிலிருந்து பேணுபவனாகவும் குடும்பநிலை இருந்ததை அறிய முடிகிறது ஆணும் பெண்ணுமாக நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ்க்கை நடத்தியபோது "மனை" மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றது.

மரபு:

உணவு தேடல், இருப்பிடம் அமைத்தல் என்ற நிலை

மட்டுமின்றி, வம்ச விருத்தியெனும் முக்கியமான அம்சமொன்றும் குடும்பம் என்ற அமைப்பிலே சில வரையறைகள் தோன்ற அவசியமாக இருந்தது. இக்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற வரையறை ஏற்பட்டிருக்க வேண்டும். கணவன், மனைவி, மக்கள், உறவினர், நண்பர் என்ற நிலையில் அவரவரது கடமைகளும் பொறுப்புகளும் வகுக்கப்பட்டன. விலங்கு - வாழ்விலிருந்து மனித வாழ்க்கை இப்புதிய கடமைகளாலும் பொறுப்புகளாலும் பகுத்தறிவு கொண்டு வேறுபட்டுச் சிறப்புப் பெற்றது. இவ்வாறு மனித வாழ்க்கைக்குக் கற்பிக்கப்பட்ட நெறிகள் சமூகத்தின் பண்பாடாக நிலைபெற்றமைந்தன. நிலத்தைப் பண்படுத்தி விளைநிலமாக்கி பயன் பெற்றது போன்று மனிதனும் தனது வாழ்க்கை நெறிமுறைகளைப் பண்படுத்திக்கொண்டான். இவ்வாறு கடைப்பிடித்த நெறிமுறைகள் மரபுகளாகப் பேணப்பட்டன. அம்மரபுகளை மனித வாழ்க்கையின் நெறி பற்றிப் பாடியவர்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டனர். அவை இலக்கிய மரபுகளாக இன்னும் கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய இலக்கிய மரபுகளைப் பிற்காலத்தில் இலக்கியம் படைத்த புலவர்கள் எடுத்துத் தமது பாடல்களில் பாடினர். பழந்தமிழ்ப் புலவர்களாகிய சங்ககாலப்புலவர்கள் மனித வாழ்க்கைக்காகக் கற்பித்த நெறிகளை நுணுக்கமாகத் தமது பாடல்களிலே கூறியுள்ளனர். அவ்வாறு குறிப்பிட்டுச் சென்ற ஒழுக்கங்களில் "கற்பும்" (Chastity) ஒன்று, பிற்காலப்புலவர்கள் பலர் கற்பு என்பதை சரியாக விளங்கிங் கொள்ளாமல் தவறான விளக்கங்களைக் கொடுத்துச் சென்றுள்ளார்.

கற்பு - விளக்கம்:

"கற்பு" என்னும் சொல் சங்க இலக்கியங்களிலே பல இடங்களில் வந்துள்ளது. சங்க இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்த பலரும் இது பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

பிற்கால இலக்கியங்களிலே 'கற்பு' என்பது மிகச்சுருங்கிய பொருளில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக 'கற்பு' பெண்ணின் ஒழுக்கத்துடன் மட்டுமே சம்பந்தப்பட்டதாக இன்று பொருள் கொள்ளப்படுகின்றது. கற்பு என்ற சொல்லின் தோற்றப்பொருள் கற்பித்தப்படி ஒழுகுதல் என்பதே. இதனையே சங்கப்புலவர்கள் இச்சொல்லைக் கையாளுகின்ற இடங்களில் நுணுக்கமாகக் கூறியுள்ளனர். 'இகலடுகற்பு', 'வெளிறில் கற்பு' என்னும் தொடர்கள் கற்பு என்பது கற்பித்தவை எனப் பொருள் தருவதற்குச் சிறந்த உதாரணங்களாகும். கற்பு என்பதற்கு ஔவையார் கூறுகின்றவிளக்கமும் இப்பொருளையே தருகின்றது. சங்க இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரும் கற்பு என்பதை,

*"மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்*
*இவைமுத லாகிய இயனெறி திரியாது*
*மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்*
*பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"*(1)

என்று கற்பு பற்றி தொல்காப்பிய செய்யுளியல் சூத்திரம் கூறுகிறது.

பொருள் மரபு பற்றி விளக்குமிடத்தில்,

*"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"* (2)

என்ற இக்கருத்திற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் உரைகள் கொடுத்துள்ளனர். "கற்பென்று சொல்லப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொடுத்தற்குரிய மரபினையுடையோர் கொடுப்பக் கொள்வது" (3) என இளம்பூரணர் கூறும் விளக்கம் தனிமனித வாழ்வில் குடும்பம் என்ற அமைப்பு தோன்றும் போது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் கற்பாக அமைந்ததைத் தெளிவாக உணர்த்துகிறது.

“கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது வேள்விச்சடங்கோடு கூட ஒத்த குலத்தோனும் மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன் ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளுமாகிய தலைவியை கொடுத்தற்குரிய முறைமையினை உடைய இருமுதுகுரவர் முதலாயினர் கொடுப்பக் கொள்வது” (4) என்று நச்சினார்க்கினியர், இளம்பூரணர் விளக்காத ‘கரணம்’ என்பதை விளக்கியும் குடும்ப அமைப்பில் இணையும் ஆண், பெண் நிலைகள் பற்றி விளக்கியுள்ளார்.

கற்பு என்பது ‘கற்பித்த நெறியே’ என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் தெளிந்துள்ளனர். ஆனால் இக்கற்பு நெறியானது எவ்வாறு பெண்ணுக்கே சிறப்பானது என்பது சிந்தனைக்குரியதாகும். குடும்பம் என்ற அமைப்பினைக் காக்கும் பெண்ணே கற்பு நெறிகளைத் தனது சந்ததியினருக்குப் போதிக்க வேண்டிய சிறப்பான குணவியல்புகளையும் இயற்கையாகவே பெற்றிருந்தாள். கற்பு நெறிகளை அவளிடமிருந்தே குழந்தைகளறிந்தனர். கணவனைக் குழந்தையின் தந்தையாகவும், ஏனையவர்களை உறவினர்களாகவும் அமைய, தாயே குழந்தைக்கு நெறிமுறையாக முதன்முதல் கற்பிக்கத் தொடங்குகின்றாள். அவள் கற்பிக்கும் நெறி செம்மையுடையதாக இருந்தது. மனித வாழ்வில், சமூக நிலையில் பலரையும் குழப்பநிலையின்றி அமைதியுடன் வாழ இது வழி செய்தது.

### கற்பும் பெண்ணும்:

‘மனை’ என்ற பழைய சொல் அடிப்படையாகப் பெண்ணுக்கு ‘மனைவி’ என்ற பெயர் உண்டாகின்றது. பெண், மனைவி என்ற நிலையிலிருந்து ‘தாய்’ என்னும் சிறப்பு நிலையை அடைகின்றாள். அந்நிலையிலே ஆணைவிட குடும்பம் என்ற அமைப்புக்கு மிக முக்கியமானவளாக மாறுகின்றாள். கணவனின் செயல்களையெல்லாம் அவதானித்து குடும்ப நிலைக்குப் பங்கம்

ஏற்படாதவகையில் அனைவரும் நடந்துகொள்ள அவளே உதவுகின்றாள். கணவன் கற்பு நெறியில் தவறும்போது அவனைத்திருத்துகின்ற பொறுப்பும் அவளுடையதாகின்றது. ஒழுக்க நிலையிலே மனத்திண்மையற்ற ஆண் பிறபெண்களிடம் தொடர்பு கொள்வது பழைய சமுதாய நிலையிலே இருந்துள்ளது. சங்கப்பாடல்களில் பெரும்பான்மையான மருதநிலப்பாடல்கள் ஆணின் ஒழுக்கக்கேட்டையே வர்ணிக்கின்றன. குடும்ப நிலையில் வாழமுடியாத பல பெண்கள் ஆணின் ஒழுக்கக் கேட்டிற்கு இடம் கொடுக்கின்றனர். இந்நிலையிலும் பெண்ணே கற்பு நெறியினை ஆணுக்கு உணர்த்துபவளாகிறாள். இதனாலேயே குடும்ப நிலையில் வாழும் பெண்களுக்கு கற்பு சிறப்பித்துக் கூறப்பட வேண்டியதொன்றாயிற்று.

பெண்ணிடம், கற்பித்த நெறிப்படி வாழும் ஆற்றல் மிகுந்திருந்தது. ஆணைவிடப் பெண்ணே மனவுரம் மிக்கவளாக இருந்தாள். தனது நலத்தை மட்டுமின்றித் தன்னைச் சார்ந்தவர்களது நலத்தையும் காக்கின்ற கருணை உள்ளங் கொண்டவளாக வாழ்ந்தாள். இதனை தொல்காப்பியரும்,

*"கற்புங் காமமும் நாற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"* 5

என்று குறிப்பிடுகிறார். இதனால் கற்பு என்பது நடைமுறைப் பொருளில் மனவுரம் என்ற கருத்தினையும் பெறுவதாயிற்று. பின் வந்த காவியங்களிலும், புராணங்களிலும் பேசப்பட்ட கண்ணகி, சீதை, மண்டோதரி, புனிதவதி, தமயந்தி, பாஞ்சாலி போன்றோர் மனவுரம் படைத்தவர்களாகக் கூறப்பட்டுள்ளனர்.

பெண்ணோடு சேர்த்துக் கற்பைப் பற்றிக் குறிப்பிடும்போது நெருப்பு இணைக்கப்பட்டுள்ளது. கற்பு 'வெம்மைப்' பண்புடையது எனவும் ஒரு விளக்கமும் உருவாகியது. கண்ணகி மதுரையை

அழித்த செய்தி காப்பிய நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டாலும் கற்பின் பெருமையைக்காட்டவே அமைக்கப்பட்டுள்ளது. கோப்பெருந்தேவி, கண்ணகி என்ற இரு பெண்களின் கற்பு நெறிகளையும் அருகருகே வைத்து இளங்கோ காட்டுவதன் மூலம் பெண்ணின் மனவுரத்தின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார். அதே வேளை கோவலனின் மனவுரமின்மையே குடும்ப நிலைமை மட்டுமின்றி நாட்டு நிலையையும் சிதைத்தது என்பதையும் காட்டியுள்ளார். மனை என்ற நிலையிலிருந்து நாடு என்னும் பரந்து பட்டநிலைவரை கற்பின் அவசியத்தை அழகுற விளக்கியுள்ளார்.

பெண், சமூக நலன்கள் உருவாவதற்கு ஆரம்ப காலத்திலிருந்தே காரணமானவள். சங்கப்பாடல்களிலே குடும்ப நிலையிலே ஆண் கற்புநெறியைக் கடைப்பிடியாது வாழும் சூழல்களில் பெண் நடந்துகொள்ளும் விதம் பல பாடல்களிலே கூறப்பட்டுள்ளது.

*"நல்மனை நனிவிருந்து அயரும்*
*கைதூவு இன்மையின் எய்தாமாறே"* (6) (நற்றிணை:280)

எனவரும் அடிகள் மனைக்கு வருகை தருகின்ற விருந்தினரை உபசரிப்பதையே முக்கியக் கடமையாகக் கொண்ட பெண் தன் கணவனது கூடா ஒழுக்கத்தையறிந்தும் அவனோடு ஊடல் கொள்ளாதிருக்கின்றாள்.

கற்பித்த நெறிகளையும் மேலதிக கல்வியறிவினால் பெற்ற பகுத்தறிவையும் ஆண் இழந்து நிற்கும்போது பெண்ணே அவனைப் பாதுகாத்து நின்றாள். குடும்ப நிலையிலே அவன் கற்பு மீறல்களைப் பொறுத்துச் சமூக நிலையில் அவனை உயர்த்தினாள். இதனால் திருமணம் என்னும் அம்சம் ஆணின் வாழ்வு நெறிப்படி அமைய இன்றியமையாததாயிற்று.

கற்பு பற்றிப் பேசவந்த வள்ளுவரும் வாழ்க்கைத் துணை நலம் பற்றிக் கூறும்போது,

"*பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை யுண்டாகப் பெறின்*" (குறள் : 54)

என்று கூறுகின்றார். 'மனவுரம்' என்ற நிலையில் கற்பு, பெண்ணிடம் நிலைபெற்றிருந்ததையே விளக்கியுள்ளார். தன்னையும் காத்து தன்னைக் கொண்டவனையும் பேணி, இருவர்க்கும் குடும்ப நிலையில் அமைந்த கற்புநெறிச் சொல்லையும் காத்து, சோர்வில்லாமல் வாழும் திறமைபெற்றவள் பெண் என்பதை உயர்த்துகிறார்.

**சமமான நிலையும் மாற்றமும்:**

மரபுகளைப் பின்நோக்கிப் பார்க்கும்போது ஆரம்பகாலத்தில் ஆணும் பெண்ணும் சமமானவர்களாகவே கருதப்பட்டனர். இடைக்காலத்தில் வகுக்கப்பட்ட நெறிகளுக்கமைய வாழ்வு நடத்த முடியாதவர்கள் கற்பு என்பதைப் பெண்ணுக்குரிய அணிகலனாக்கித் தாம் ஒழுக்கநெறிக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டனர். அப்பொழுதுதான் ஆண் பெண்ணைவிட உயர்ந்தவன் என்ற புதிய கோட்பாடு தோன்றலாயிற்று. பெண் சுதந்திரமற்றவளாக ஆணுக்கு அடிமைப்பட்டவளாக அமைந்தாள். பெண் ஆணைக் கற்பழித்ததாக யாரும் கருத்துக் கூறுவதில்லை. ஆனால் விசுவாமித்திரர் - மேனகை கதையின் அடிப்படைக்கருத்து ஆணின் கற்புநெறியைப் பெண் கெடுப்பதாகவே காணப்படுகின்றது. மனவுரம் என்ற நிலையில் ஆண் பெண் இருவருக்குமே கற்பு பொதுவான குணமாகும்.

சமூக அமைப்பில் ஆண் பெண் சமநெறியுடன் வாழக் கற்பு உதவுகின்றது. அந்நெறிமுறை தவறும் ஆணும் சரி பெண்ணுஞ்சரி கற்பிழந்தவர்களாகவே கொள்ளப்படவேண்டியவர்கள். சங்க இலக்கியப் பாடல்காட்டும் களவு, கற்பு என்னும் இரு

பகுப்புகளும் மனித சமூகத்திற்கு எக்காலத்திற்கும் ஏற்புடையனவாயுள்ளன. அவன் செய்கின்ற தவறுக்கு உதவியாக இருப்பதால் பெண்ணும் கற்புநிலை அழிந்தவளாகிறாள். எனவே சமூக அமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட ஆண்கள் காரணமாயிருந்ததையும் மறுக்க முடியாது.

சமூகத்தில் வந்து கலந்த பிற நாட்டுப் பண்பாடுகளின் தாக்கத்தினால் தமிழினத்திற்கு நேர்ந்த கேடுகளைச் சாடி நம் முன்னோர் வகுத்த நெறிகளே மனித சமூகத்திற்கு ஏறுப்புடையவை என பழமை பழமையென்று பாவனை பேசியவர்களை வெறுத்த பாரதி பழமை இருந்த நிலையை யாவரும் அறிய வேண்டுமென

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்"* (8)

என்று எடுத்துக்காட்டி சங்கப்புலவர்களோடு தன்னையும் இணைத்துக்கொண்டார்.

சமூக ஒருமைப்பாட்டிற்குப் பண்டைய நெறிகள் அடிப்படையாகின்றன. இயற்கை நிலைகளின் வேறுபாட்டினை அநுசரித்தே பண்டைய *வாழ்வு நெறிகள் வகுக்கப்பட்டன.* இன்றை நாகரீக உலகில் பழைய மரபுகள் பல புதுமைகளாக நோக்கப்படுகின்றன.

- *பெண்ணின் மனவுரமும் கருணையும் மனிதனைப் பாதுகாத்து* நிற்பவை, வலிமை சேர்ப்பது தாய்ப்பாலே என்று இன்று விஞ்ஞானம் விளம்புகிறது.
- *ஆணுக்குச் சகல காரியங்களிலும் சமமாக நின்றுதவும் பெண்;* குடும்பம் *என்ற நிறுவனத்தைக் கட்டிக்காப்பவள்.* அப்படிக் காக்கப்படும் குடும்பங்கள் சேர்ந்தே சமூகம் உருவாகிறது. சமூகங்களின் இணைப்பினால் நாடு தோன்றுகிறது. இது இயற்கையான நடைமுறையாக இருந்து வந்துள்ளது.

மேற்கோள் நூல்கள்:

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை, கழக வெளியீடு, பிப்ரவரி - 1965 ப.234 நூ.எ.189

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் இளம்பூரணம் 2 ஆம் பதிப்பு (கழக வெளியீடு) சென்னை - 1 அக்டோபர் - 1969. கற்பியல் நூற்பா எண் 140. ப.249

3. மேற்படி, ப.249 நூற்பா எண் 140, இளம்பூரணர் விளக்கம்

4. தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை 2 ஆம் பதிப்பு (கழக வெளியீடு, சூலை - 1977) ப.163

5. மேற்படி (கழக வெளியீடு, சென்னை - 1 ம.ப. அக்டோபர் 1969) கற்பியல் நூற்பா எண் 150) ப. 301

6. நற்றிணை (கழக வெளியீடு, சென்னை - 1 நான்காம் பதிப்பு, பிப்ரவரி, பிப்ரவரி 1967) ப.ச.எ.அ.பா.எ.280

7. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், முதல் பகுதி, "அறத்துப்பால்" (மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை 1972) வாழ்க்கைத்துணை நலம் பாடல் எண்: 4 ப. 67.

8. பாரதியார் கவிதைகள் (வானவில் பிரசுரம் பு.பதி.24.1.1930) 'விடுதலை' ப.180, பத.3.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

# தொல்காப்பிய இலக்கியக் கொள்கை (அகம்)

முனைவர் பெ.சுயம்பு

## திணை இலக்கியம்

சிறந்த இலக்கியம் படைப்போர் அவ்விலக்கியத்தை ஏற்றுக் கொள்கிற மொழிக்குரிய வழிவழி வந்த மரபினை முற்றிலும் மறுத்து ஒதுக்குதலும் அம்மரபினை அவ்வாறே ஏற்று வழி மொழிதலோ கூடாது. மரபினை ஏற்றுப் புதிய முறையில் கூறுதல் வேண்டும். இவ்வாறு பெர்னார்டுஷா இலக்கியப்படைப்புக் குறித்துக் கூறுகிறார். தொல்காப்பியம் தமிழ் இனத்தின் காலத்திற்கு ஏற்ற வாழ்வியல் மாற்றங்களை ஏற்றுத் தமிழ் இலக்கிய மரபில் சில புதுமைகளைச் சேர்த்து இலக்கணம் கூறுகிறது. இந்த நெகிழ்ச்சிப் போக்கே இலக்கியக் கொள்கையில் நடப்பியலை இணைத்து. உயிரோட்டம் மிக்க சுவையைத் தருகிறது. தொல்காப்பியம் சிறந்த படைப்பு என்பதனை அதன் நுற்பாக்களில் காணப்படுகிற மரபினைச் சார்ந்து மொழிதல். புதியன கூறுதல் என்னும் போக்கில் காணலாம்.

தமிழ் இலக்கிய மரபு நிலத்தின் அடிப்படையிலான ஒழுக்கத்தினைத் தளமாகக் கொண்டது. நிலம் சார்ந்த ஒழுக்கம் திணை எனப்படுகிறது. திணைகளுக்கு ஏற்ப மாந்தரின் உணர்ச்சிகளும் வாழ்க்கை நிகழ்வுகளும் வேறுபடுகின்றன. வாழ்க்கை நிகழ்வுகளும் வேறுபடுகின்றன. இவ் வேறுபாடு காரணமாகப் பாடல்கள் அல்லது இலக்கியங்களும் வேறுபடுகின்றன.

உலகப் பொருள்கள் யாவும் முதல். கரு. உரி. என வகைப்படுத்தப்படுகின்றன. நிலமும் பொழுதும் முதற் பொருள்கள். நிலத்தில் காலத்திற்கு ஏற்பத் தோன்றி ஒடுங்குவன

கருப் பொருள்கள். மனித மனவுணர்வுகளும் நிகழ்வுகளும் உரிப் பொருள்கள்.

உரிப் பொருளே இலக்கியத்தின் பாடுபொருள். கருப்பொருள் பாடுபொருளுக்குரிய இலக்கிய மாந்தர்களும் பாடுபொருளை நடப்பியலாக வெளிப் படுத்த வல்லனவும் அதனை ஆற்றலுடன் விவரித்தற்கான உத்திகளாக இடம் பெறுவனவுமாகிய உயிருள்ள உயிரற்ற பொருட்கள் போல்வனவு மாகும். முதற் பொருட்கள் பாடு பொருளைச் சுவைஞர்கள் ஆற்றலுடன் உணர்ந்து கொள்ளுதற்குரிய பின்புலமாக உள்ளது.

உரிப்பொருள்களின் இயல்புக்கு ஏற்ப அவற்றிற்கான நிலத்தினைத் தமிழ்க் கவிஞர்கள் தெரிவு செய்தனர். அந்நிலத்து உரிப்பொருளைப் பாடுபொருளாகக் கொண்ட கவிதை அல்லது இலக்கியத்தையும் ஒழுக்கத்தையும் அந்த நிலத்தின் பெயராலேயே குறிப்பிட்டனர்.

குறிப்பிட்ட நிலமும் பொழுதும் குறிப்பிட்ட உரிப்பொருளினை உணர்ச்சி குன்றாமல் உணர்தற்குப் பின்புலமாகக் காணப்படுகின்றன. சான்றாகக் குறிஞ்சி இலக்கியத்தைக் குறிப்பிடலாம். காதலர் இருவரும் ஏனையோருக்குப் புலப்படாமல் மறைவாகக் கண்டு, பேசி, கூடிக் காதல் செய்தற்கு இடம் மலைநிலமாகும். அங்குச் சுனை, சோலை போன்ற இன்பச் சூழலும் மறைவுப்பகுதியும் உள்ளன. யாமமும் குளிர்காலமும் இவ்வகை ஒழுக்கத்திற்கு ஏற்ற காலங்கள். மேலும் பிற மாந்தரும் இக்காலச் சூழலில் இப்பகுதிக்கு வர விரும்புதல் இல்லை. எனவே புணர்ச்சி ஒழுக்கத்திற்குக் குறிஞ்சி எனும் முதற் பொருளைப் பழந்தமிழ்க் கவிஞர்கள் தெரிவு செய்துள்ளனர்.

காதலர்களின் பிரிவு ஆற்றுதற்கு அரிய துன்பத்தை அவர்களுக்குத் தரவல்லது. எனவே இவ்வொழுக்கம் கடுங்காற்று,

புதைமணல், நிழலற்ற வெப்பக்காலம் ஆகியவற்றைக் கொண்ட பாலைநிலத்துடன் தொடர்புபடுத்தப் பெற்றுள்ளது. பாலை என்றொரு நிலம் தமிழகத்தில் இல்லை என்பதனைத் தொல்காப்பியம் நிலத்தை நான்காக வகைப்படுத்தியதன் வழித் தெரிவிக்கிறது. எனினும் பிரிவின் கொடுமை கருதிப் பாலை என்ற பெயரைத் தமிழன் இவ்வொழுக்கத்திற்குச் சூட்டியுள்ளான்.

புற இலக்கியத்திற்கும் முதல், கரு, உரி என்னும் வகைப்பாடு பொருந்தும் என்பதனைத் தொல்காப்பியம் வெட்சி தானே குறிஞ்சியது புறனே என்பது போன்ற கூற்றுக்களின் வாயிலாகத் தெரிவிக்கிறது. மலை நிலம் ஒரு நாட்டிற்கு இயற்கையான எல்லை, அரண் எனவே அப்பகுதியில் காணப்படுகிற ஆநிரைகளை எதிரி நாட்டினர் கவர்ந்து செல்வதன் வாயிலாகப் போரின் தொடக்கம் அமைகிறது. நாட்டின் செல்வமாகவும் புனித உயிராகவும் கருதப்படுகிற ஆநிரைகளைக் கவர்தலும் அதனை மீட்டலும் வேந்தர்களுக்குக் கௌரவத்தை மட்டுமன்றி, பொருளியலைப் பேணுகிற கடமையும் ஆகிறது. இதனாலேயே எல்லைப்புறப் போர்நிகழ்ச்சியை விவரிக்கிற வெட்சி ஒழுக்கத்திற்கு மலை நிலமாகிய குறிஞ்சிப் பகுதி முதற்பொருளாகக் கருதப்படுகிறது. இவ்வாறே உரிப்பொருள் யாவற்றுக்கும் அவற்றோடு தொடர்புடைய முதற்பொருள்கள் சிறந்த பின்புலமாக விளங்குகின்றன.

அகஇலக்கியம்.

தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் எனப் பகுத்து விவரிக்கப்படுகின்றன. எனினும் தொல்காப்பிய இலக்கணத்திலும் சங்க இலக்கியங்களிலும் அகம் சார்ந்தனவே பேரளவில் காணப்படுகின்றன. தொல்காப்பியப் பொருளதி காரத்தில் புறத்திணையியலும் மரபியலும் தவிர்த்து ஏனைய

ஏழு இயல்களும் அக இலக்கியம் பற்றிய செய்தி களையே விரிவாகப் பேசுகின்றன.

மனிதர்களின் காதல் பற்றிப் பாடுதலும் அதனைக் கேட்பதும் மாந்தருக்கு இனிய உணர்வைத் தரவல்லவை. சுவைஞர்களிடம் பெற்றிருக்கிற செல்வாக்குக் காரணமாக அதற்கு இலக்கிய உலகில் முதன்மை தரப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத்தில் அகப்பாடல்கள் பேரளவில் இருத்தற்கும் இது பொருந்தும். மேலும், பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அகப்பாடல்கள் பேரளவில் இருத்தற்கு மற்றுமொரு காரணத்தையும் குறிப்பிடமுடியும். அக்கால முடியாட்சிச் செல்வச் செழிப்புள்ள சமூகத்தில் ஆளுகிற இனத்தவரே கலைகளைச் சுவைத்து இன்புற முடிந்தது. உணவு, உடை போன்ற இன்றியமையாத பொருள்களுக்கே ஆவலாய்த் திரிந்து கொண்டிருந்த சாதாரண மக்களுக்கு இந்த வாய்ப்பு எளிதில் அமையக் கூடியதன்று செல்வச் செழிப்புள்ள இனத்தவரை மகிழ்வித்து வாழ்க்கைக்குத் தேவையான பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் பெரும் பான்மையான கலைஞர்கள் இருந்தார்கள் காதலையும் அது தொடர்பான நிகழ்வுகளையும் புனைந்து பாடினர். இப்பாடல்கள் சுவைஞர்களுக்குள்ளே ஒடுங்கிக் கிடந்த உணர்வுகளை எழுப்பி இன்பமூட்டின. அகப்பாடல்கள் தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்றதற்கு இவற்றைக் காரணங்களாகக் கூறலாம்.

**துன்பியல் இலக்கியம்.**

இலக்கியங்கள் வாயிலாக இன்பியல். துன்பியல் எனும் இருவகை உணர்வுகளைச் சுவைஞர்களால் எய்த முடிகிறது. இவ்விரண்டனுள் துன்பியலே மிகுதியாகச் சுவைஞர்களைக் கவர்கிறது. தமிழ் அகப்பாடல் மரபிலும் துன்பியலே மேலோங்கி நிற்கிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தும் ஆணும் பெண்ணும் மனம் ஒத்து இன்ப உணர்வு எய்தி மேற்கொள்ளும்

காதல் ஒழுக்கங்கள் ஆகும். இவை தவிர. கைக்கிளை. பெருந்திணை என்பனவும் உள்ளன. இவற்றுள் காதலர் இருவரும் அறிமுகமாகிக் கொள்ளும் முன்னர்க் காதலின் முதற்படிநிலையாக அமைவது கைக்கிளை. மேலும் ஆணோ பெண்ணோ ஒருதலையாகக் காமுறுதலும் கைக்கிளையாகும். பருவம் ஒப்பில்லாதவர்களின் காம உணர்வும் அவ்வுணர்வினை அனுபவித்துத் தீர்க்க முயல்வதும் பெருந்திணையாகும். எனவே கைக்கிளையும் பெருந்திணையும் அறத்திற்கு அப்பாற்பட்டு, தனக்கும் தீங்கு தருவனவாக அமைகின்றன. மனம் ஒத்த காதலாகிய அன்பின் ஐந்திணைகளுள்ளும் குறிஞ்சி தவிர்த்த நான்கும் காதலர்களின் ஒருவகைப்பட்ட பிரிவினையும் அதன் காரணமாக எய்துகிற துன்ப உணர்வினையும் புலப்படுத்துகின்றன. எனவே தமிழ் அகப்பாடல்களுள் துன்பியலே மிகுந்து காணப்படுகிறது. என்பது உண்மை. அகஇலக்கியப் பாடல்களுள் பெண்கள் தொடர்பானவை மிகுதியாக உள்ளன. காதல் ஒழுக்கத்தில் துன்பத்தைப் பெரிதும் ஏற்பவர்கள் அவர்களாக இருத்தலே இதற்குக் காரணமாகும்.

### பாவனை இலக்கியம்.

தமிழ் அகஇலக்கியம் கற்பனைசார்ந்த புனைந்துரையும் நடப்பியலும் கலந்து அமைவதாகும். கவிஞர்கள் குறிப்பிட்ட காதலர்களை மனத்தில் உருவகமாகப் பாவித்து அவர்களது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாகப் பாவனை செய்து பாடுகின்றனர் எனவே இப்பாடல்களில் கவிஞர்களின் தன்னுணர்ச்சி நேரடியாக வெளிப்படுதல் இல்லை. எனவே அகப் பாடல்கள் பாவனை இலக்கியங்களாகக் கருதத்தக்கவை

அகஇலக்கியங்கள் பாவனை வகையாக இருத்தலால் பாடலில் வருகின்ற இலக்கிய மாந்தர்களின் இயற் பெயர்களோ அவர்களை இனம் காட்டவல்ல சிறப்புப் பெயர்களோ சுட்டிக்

கூறப்படுதல் இல்லை. பாடல்களின் உரிப்பொருள் சார்ந்த திணைநிலைப் பெயர்கள் பொதுவாகக் கூறப்படுகின்றன. இதனையே தொல்காப்பியம்.

"மக்கள் நுதலிய அகனைந் திணையும்
*சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்"*

எனக் கூறுகிறது.

உலகப் பொதுமை என்ற தத்துவம் எல்லாக் கலைகளுக்கும் பொருந்திய. ஒன்று என்ற நிலையில் கவிதைக் கலைக்கு இன்றிமையாத ஒன்று என்று அன்றுமுதல் இன்று வரையிலும் உள்ள கவிதைக் கலை விற்பன்னர்களும் பல்வேறு கவிஞர்களும் கூறி வந்துள்ளனர்... தொல்காப்பியர் இதனை நன்கு அறிந்திருந்தார் ( ச. அகத்தியலிங்கம் . கருத்தரங்கச் சிறப்புரை. தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள். ப. XXI)

அகஇலக்கியங்கள் பொதுப்பட விவரிக்கப்படுதற்கு இலக்கியங்களைச் சாதி மத நாட்டு எல்லைகளை மீறி யாவரும் சுவைக்க வேண்டும் என்ற பொது நோக்கம் ஒரு காரணமே. ஏனெனில் தனிப்பட்ட இருவரின் காதல் ஒழுக்கத்தைப் படிப்பதிலோ அறிந்து கொள்ளுவதிலோ மனித மனம் மிகுதியாக நாட்டம் செலுத்துதல் இல்லை. எனினும் தமிழ்ச் சமூக அமைப்பும் இதற்குத் தவிர்க்க முடியாத காரணமாக உள்ளது. காதல் ஒழுக்கமும் அதனைத் தொடந்து அமைகிற இல்வாழ்கையில் உருவாகும் சிக்கல்களும் மறைவாகவும் புனிதமாகவும் கருதப்படுகின்றன. திருமணத்திற்கு முன்னர் இருவர் காதலிப்பதை இச்சமூகம் தாராளமாக ஏற்றுக் கொள்ளுதல் இல்லை. இக்காதல் சமூகக் கட்டுக் கோப்பினைக் குலைத்துப் பேரழிவை உருவாக்குகிற தீய ஒழுக்கமாகக் கருதப்படுகிறது. இதனாலேயே திருமணத்திற்கு முந்தைய காதலைக் களவு எனத்

தமிழர் மதிப்பிடுகின்றனர். இத்தகைய சூழலில் இக்காதல் ஒழுக்கத்தினை விவரிக்கிற இலக்கியத்தினால் காதலர்களைச் சமூகத்திற்கு அடையாளம் காட்டுகிற இயற்பெயரை எவ்வாறு சுட்டிக் கூற இயலும்?

## பண்பாட்டுப்பிடிக்குள் இலக்கியம்

தமிழ் அக இலக்கிய மரபு பல கட்டுப்பாடுகளைக் கொண்டது. இக்கட்டுப்பாடுகள் தமிழ்ச் சமூகப் பண்பாட்டைச் சிதைவின்றிப் பேணும் நோக்கில் உருவாக்கப் பட்டவையாகும்.

அக இலக்கியம் தமிழ்ச் சமூக - குடும்ப அமைப்பிற்கு அரணாக அமையவல்ல இலட்சியக் காதலை எடுத்துரைக்கிறது. எனவே பாடல்களில் வருகிற காதலர்களும் சமூகக் கட்டுக்கோப்பினை மீறாத பண்புகளும் ஒழுக்கமும் உடையவர்களாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர். தொல்காப்பியம் சிறந்த பண்பும் ஒழுக்கமும் நிரம்பிய காதலர்களே நிறைவான இன்பம் உடைய குடும்பத்தை நடத்த இயலும் எனக்கருதுகிறது. எனவே அது சமூகக் கட்டுப்பாட்டுடன் இணைந்த பண்புகளை ஆணுக்கும் பெண்ணுக்கும் வரையறை செய்கிறது. சமூகத்தையும் குடும்பத்தையும் தலைமை ஏற்று நடத்தும் ஆதிக்கம் பெற்றவன் ஆண். எனவே அவன் பெருமைக்கும் அறிவு நுட்பத்திற்கும் உரிமை உடையவன். இதனை,

*'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'*

எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

ஆணுக்கு அடங்கி, அவனுக்கு இல்வாழ்க்கையில் துணையாகி நிற்பவள் பெண். அவள் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் பெருமையைச் சிதையாதுபேணும் கடமைக்குரியவள். தமிழ்ச் சமூக அமைப்பில் பெண்ணுக்குக் கற்பு உயிரைவிட மேலானதாகக் கருதப்படுகிறது. கற்பு அவளது கணவனின்

பெருமைக்கும் குடும்பப்பெருமைக்கும் மட்டுமன்றி, சமூக அமைப்பின் கட்டுக்கோப்புக்கும் அடித்தளமாக இருப்பதனால்,. இத்தகைய கட்டாயத்தினை அது பெற்றுள்ளது.

*உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்*
*செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று*

என்பது கற்புக் குறித்த தொல்காப்பியத்தின் மதிப்பீடு. மேலும், அவளது கற்புக்கு அரணாக நிற்கவல்ல பண்புகளையும் தொல்காப்பியம்,

*உயிரும் நாணும் மடனும் என்றிவை*
*செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய*

என்றும்

*செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்*
*அறிவும் அருமையும் பெண்பா லான*

என்றும்

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப*

என்றும் பட்டியலிடுகிறது.

ஆணாதிக்கச் சமூகத்தில் பெண் ஆணுக்கு அடங்கியவள்;. கட்டுப்பட்டவள். எனவே அவனுக்கு நேராக எதிரில் நின்று பேசுதலும் தனது காதல் உணர்வுகளை வெளிப்படையாக எடுத்துக் கூறுதலும் பெண்ணுக்குப் பெருமை தரும் பண்புகள் அல்ல; தவிர இவை ஆணின் பெருமைக்கு இழுக்காகவும் கருதப்படுகின்றன.

*காமத் திணையின் கண்ணின்று வருஉம்*
*நாணும் மடனும் பெண்மைய ஆகலின்*
*குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை*

*நெறிப்பட வாரா அவள்வயி னான.*

*தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல்*
*எண்ணுங் காலை கிழத்திக் கில்லை*
*பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்*
*பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப.*

*சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்*
*அல்ல கூற்றுமொழி அவள்வயி னான*
*அவன்வரம் பிறத்தல் அறம்தனக் கின்மையின்*
*களம்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்.*

இவை யாவும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு குறித்த தொல்காப்பியச் செய்திகள். சமூகத்தின் இத்தகைய வரையறையை மீறியதாக இலக்கியம் அமையக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டும் நோக்கில் இவ்விதிகள் இயற்றப்பட்டுள்ளன. காதலுணர்வு எத்துணை மிகுந்த போதிலும் அதனைப் பிறருக்கு வெளிப்படுத்துதல் கூடாது என்பது தமிழ்ப் பெண்களுக்குச் சமூகம் விடுத்துள்ள எச்சரிக்கையாகும். இதனாலேயே,

*எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மை யான*

என்னும் விதியும் எழ நேர்ந்தது.

தமிழ்க்காதல் வட இந்தியக் காந்தருவக் காதலைப் போன்றதன்று. எதிர்ப்பட்ட பெண்ணை அவளது உடன்பாடின்றிப் புணர்ந்து, கைவிட்டுச் செல்வது காந்தருவமாகும். அக்காதலில் மன வொப்புமை, இருவருக்கும் இன்பம், பருவம், பிறப்புப் போன்ற ஒற்றுமை ஏதும் இல்லை. எனவே அது அறவழிப்பட்ட தன்று. ஆனால் தமிழர்காதல்,

*'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*

*அன்பொடு புணர்ந்த ஐந்திணை'*

எனக் கருதப்படுகிறது. காதலர் இருவரும் மணம்புரிந்து, நன் மக்களைப் பெற்று, இல்லறம் புரிந்து, இன்புறுவதே ஐந்திணைக் காதலாகும். காதலர்கள் இல்லறத்துள் இணையாது பிரிவது வெறும் காமமாகவும் அறத்திற்கு மாறானதாகவும் கருதப்படுகிறது. இதனாலேயே காதலர்களை இல்லறத்துள் அமர்த்துகிற முயற்சியை '*அறத்தொடு நிற்றல்*' என இலக்கியங்கள் கூறுகின்றன.

காதல் முன்னேற்பாடுடன் திட்டமிட்டு நடைபெறும் நிகழ்ச்சி அல்ல. அது முந்தைய ஊழ்வினைப் பயனாகத் தற்செயலாக - இயற்கையாக நிகழ்வதாகும். இதனைத் தொல்காப்பியம்,

*ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*
*மிக்கோன் ஆயினும் கடிவரை வின்றே*

எனக் கூறுகிறது. இங்குத் தமிழரின் சமய நம்பிக்கையின் தாக்கம் காதலில் படர்ந்துள்ளது.

தொல்காப்பியம் தமிழ்க்காதலர்களுக்கிடையே பத்து ஒப்புமைகளைச் சுட்டுகிறது.

*பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு*
*உருவு நிறுத்த காம வாயில்*
*நிறையே அருளே உணர்வொடு திருவென*
*முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே*

இவ்வொப்புமைகள் யாவும் சமூகக் கட்டமைப்பினைச் சார்ந்து உருவாக்கப் பெற்றவையாகும். இவற்றுள் பெண்ணைவிட ஆண் உயர்வாக இருத்தல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இது ஆணாதிக்கத்திற்கு வழங்கப் பெற்றுள்ள ஒரு சலுகையாகும்.

பிறப்பு முதலிய உயர்ந்த பண்புகளைப் பரிந்துரைக்கிற தொல்காப்பியம் சில தீய பண்புகளைக் காதலர்களுக்கு விலக்கி வைக்கிறது. அவை,

*நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி*
*வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை*
*இன்புறல் ஏழைமை மறப்பொடு ஒப்புமை*
*என்றிவை இன்மை என்மனார் புலவர்*

என்பனவாகும். இப்பண்புகள் யாவும் காதல் இனிதாக நிறைவேறி, அதன் காரணமாக அமைகிற குடும்ப அமைப்பும் சமூக அமைப்பும் சீராக இருத்தல் வேண்டும் என்ற அச்சத்தின் காரணமாக விதிக்கப்பட்டவையாகும்.

தொல்காப்பியம் காம வயப்பட்ட கேளிக்கையாகக் காதல் முடிவதை விரும்பவில்லை. உணர்வாலும் சமூக அமைப்பினாலும் ஒத்து, ஒன்றுபட்ட ஆணும் பெண்ணும் அன்பினால் இணைந்து, பொருளை ஈட்டி, நன்மக்களைப் பெற்று, சமூகக் கடமையாகிய அறத்தைத் தவறாது செய்து வாழ்தற்கு அடித்தளமாகவே காதலைக் கருதுகிறது. அறவழிப்பட்ட குடும்ப, சமூக வாழ்வுக்குத் தனிமனிதர்களைத் தகுதிப்படுத்தும் படி நிலையாகவே அன்பும் அன்பினால் அமைந்த காதலும் தமிழ்ச் சமூகத்தில் கருதப்படுகின்றன.

இலக்கியத்திற்குக் கவினாகிய நயத்தைப் புனைந்துரை தருகிறது; ஆனால் நடப்பியலோ உயிரோட்டத்தை அளிக்கிறது. இலக்கிய நிகழ்ச்சிகள் உலகிலும் தம் வாழ்விலும் நடத்தற்கு உரியவை எனச் சுவைஞன் கருதும்போதே, அவனுக்கு இலக்கியத்தில் நம்பிக்கை ஏற்படுகிறது. அதனால் அதனை மேன்மேலும் சுவைக்கத் துடிக்கிற ஆர்வம் உண்டாகிறது. ஓர் இலக்கியம் சுவைஞர்களால் பேரளவில் விரும்பப்படும் பொழுதே, அது உயிரோட்டம் பெற்று நெடுங்காலம் நிலைத்து

நிற்கும் ஆற்றலைப் பெறுகிறது. இதனாலேயே தமிழ் இலக்கிய மரபு தமிழர் வாழ்க்கை நிகழ்வுகள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் பாடுபொருளுடன் இணைத்துப் பேச இடமளிக்கிறது.

தொல்காப்பியமும் சிறந்த இலக்கிய வடிவாக்கத்தின் பொருட்டே தமிழ்ச்சமூகப் பண்பாட்டுக் கூறுகளை இணைத்துப் பல விதிகளை அமைத்துள்ளது. இத்தகைய இலக்கிய உத்திகளைப் பெற்றிருப்பதாலேயே சங்க இலக்கியம் மக்கள் வாழ்வோடு இயைந்த மக்கள் இலக்கியம் என்று கூறப்படுகிறது.

### தனிமொழி நாடகம்

அகப்பாடல்கள் யாவும் ஓர் இலக்கிய மாந்தர் தம் உணர்வுகளை எடுத்துரைப்பதாக உள்ளன. எனவே இவை தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, நற்றாய் கூற்று, செவிலி என்றாற் போன்று இலக்கிய மாந்தர்களின் கூற்றின் அடிப்படையில் தலைப்பிட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப் பாடல்கள் பாவனை மாந்தர்களின் தனிமொழிக் கூற்றாக இருப்பினும், அக்கூற்றினைக் கேட்போரும் விளித்தல் வாயிலாக இடம்பெற்றுள்ளனர். இதனால் இவை தனிமொழி (Monologue) நாடக வகையாகக் கருதப்படுகின்றன.

தொல்காப்பியம் களவு, கற்பு என்னும் இரு வகைக் கைகோள்களிலும் உரையாடுதற்குரிய இலக்கிய மாந்தர்களைப் பட்டியலிடுகிறது.

*பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி*
*சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு*
*அளவியல் மரபின் அறுவகை யோரும்*
*களவின் கிளவிக் குரியர் என்ப.*

*பாணன் கூத்தன் விறலி பரத்தை*
*ஆணம் சான்ற அறிவர் கண்டோர்*
*பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா*
*முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇ*
*தொன்னெறி மரபின் கற்பிற் குரியர்.*

தன்னேரில்லாத (சீர்த்தகு சிறப்பின்) தலைமக்களாகக் காதலர் இருவரும் கருதப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் பெருமையும் தலைமையும் வாய்ந்தவர்கள். ஆதலால் இவர்களுக்காகப் பணியாற்றப் பலர் இருத்தலை இந்நூற் பாக்களில் காணமுடிகிறது. கூறுதற்கு உரியோர், அக்கூற்றினைக் கேட்டற்கு உரியோர் என இலக்கிய மாந்தர்களை வரையறைப் படுத்துவதும் சமூகக் கட்டமைப்பினை ஒட்டியே அமைந்துள்ளது.

அக இலக்கியங்கள் நாடக வகையின என்பதற்கு மற்றுமொரு சான்று மெய்ப்பாடு பற்றிய கருத்து ஆகும். தொல்காப்பியம் மெய்ப்பாடு குறித்த கருத்துக்களைத் தனி இயலில் விவரிக்கிறது. அக்கருத்துக்களுள் மிகப் பெரும்பான்மையன காதலர்கள், குறிப்பாகக் காதலியின் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்துகிற மெய்ப்பாடுகள் பற்றியனவாகவே உள்ளன. காதலுணர்வுகளை வெளிப்படையான கூற்றின் வாயிலாகத் தெரிவித்தல் காதலியால் இயலாது. எனவே மெய்ப்பாடுகளின் வாயிலாகக் குறிப்பாக அவை வெளிப்படுகின்றன. இதனால் அக இலக்கியத்தில் மெய்ப்பாட்டின் இன்றியமையாமையினை உணரலாம். அகப்பொருளாகிய பாடுபொருளைத் திறம்பட வெளிப்படுத்தும் ஆற்றல் மெய்ப்பாட்டிற்கு உளது என்று கருதியதாலேயே '*இலக்கண விளக்கம்*' மெய்ப்பாடு குறித்த கருத்துக்களை அகத்திணையியலில் அடக்கி விவரிக்கிறது.

புறச்செயல்களைப் பேசியும் உறுப்புக்களை அசைத்தும்

தெரிவிக்கலாம். ஆனால் உள்ளத்து உணர்வுகளை மெய்ப்பாடுகளின் வாயிலாகவே வெளிப்படுத்த இயலும். எனவே நாடகத்திற்கு மெய்ப்பாடு மிக இன்றியமையாத கூறாகக் கருதப் படுகிறது. மெய்ப்பாடு பற்றிய செய்திகளை அகப்பொருளுடன் இயைபுபடுத்திக் கூறுவதன் வாயிலாகத் தொல்காப்பியம் அக இலக்கியத்தை நாடகம் சார்ந்ததாகக் கருதுகிறது.

### உள்ளுறையும் இறைச்சியும்

இலக்கியத்தின் சிறப்புக்கு அதன் பாடுபொருளும் புற அமைப்பாகிய ஓசையுமட்டுமன்றி, பாடுபொருளை வெளிப்படுத்துகிற விவரிப்பு முறையும் காரணமாகிறது. தொல்காப்பியம் உவமை, உள்ளுறை உவமை, இறைச்சி ஆகியவற்றை அகப்பாடுபொருளைப் புலப்படுத்தவல்ல உத்திகளாகக் கருதுகிறது. அம்மூன்றனுள் உவமை வெளிப்படையான கூற்றுவாயிலாகக் கருத்து விளக்கத்திற்குப் பயன்படும். எனவே இது வெளிப்படை உவமை எனவும் கூறப்படுகிறது. ஏனைய இரண்டும் வெளிப்படையாக அன்றிக் குறிப்பாக அகப்பாடுபொருளை உய்த்துணர வைப்பனவாகும்.

உவமை அகப்பாடுபொருளைப் புலப்படுத்துகிற கருவிகளாக அமைதலை,

*உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்*
*தள்ளா தாகும் திணையுணர் வகையே*

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

ஏனை உவமமே பொதுவாக உவமை எனக் கூறப்படுகிறது. இது கவிதையின் பொருளும் அதனொடு ஒத்த உவமையும் இணைந்த தொடராகி, வெளிப்படையாகக் கவிதையினைப் புரிந்து கொள்ளுமாறு அமையும். இதனைத் தொல்காப்பியம்,

*ஏனை உவமம் தானுணர் வகைத்தே*

என விளக்குகிறது. ஆனால் உள்ளுறை உவமையின் அமைப்பு வேறு விதமானது. இதில் உவமை மட்டுமே இருக்கும். கவிஞன் சொல்லக் கருதிய பாடுபொருள் சொல்லளவில் காணப்படாது; உவமையிலிருந்து பாடுபொருளைச் சுவைஞர்கள் உய்த்துணர வேண்டும்.

*உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென*
*உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்*

என்பது உள்ளுறை உவமம் குறித்த தொல்காப்பிய விளக்கம்.

உள்ளுறை உவமம் ஒரு வகைக் குறிப்புமொழி ஆகும். இதனைக் கூறத்தகுந்த சூழலையும் தொல்காப்பியம் வரையறுக்கிறது.

*இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்*
*உவம மருங்கின் தோன்றும் என்ப*

இது தொல்காப்பியத்தின் வரையறை

காதல் ஒழுக்கத்தில் மகிழ்ச்சியும் துன்பமும் மேலோங்குகிற சூழல்களில் தலைவி முதலியோர் தம் உணர்வினை உள்ளுறை வாயிலாக வெளிப்படுத்துவர். புணர்ச்சியும் அது சார்ந்த நிகழ்ச்சிகளும் மகிழ்ச்சிக்கு உரியன. பொருள், தொழில் அல்லது பரத்தை காரணமாகத் தலைவன் பிரிதலும் அது சார்ந்த நிகழ்ச்சிகளும் துன்பத்தை மிகுதிப்படுத்த வல்லவை. இத்தகைய சூழல்களில் தலைவி, தோழி போன்றோர் தம் உணர்வுகளை வெளிப்படையாக எடுத்துரைத்தற்குப் பண்பாடு சார்ந்த நாணம். அச்சம் போன்ற பண்புகள் இடமளித்தல் இல்லை. எனவே அவர்கள் உள்ளுறை வாயிலாகத் தம் உணர்வுகளைக் குறிப்பாக வெளிப்படுத்துவர்.

இலக்கிய மாந்தர்கள் உவமைகளாக எடுத்துரைக்கிற கருப்பொருள்களிலும் ஏற்றத்தாழ்வு காணப்படுகிறது.

கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்

கிழவி சொல்லின் அவளறி கிளவி

தோழிக் காயின் நிலம்பெயர்ந்துரையாது

என்னும் நூற்பாக்கள் இலக்கிய மாந்தர்களுக்குச் சமூகம் அறிவுடைமை தொடர்பாக அளித்திருக்கிற உரிமையினைப் புலப்படுத்துகின்றன.

## இறைச்சி:

அகப்பாடுபொருளை வெளிப்படுத்துகிற இன்னொரு முறை இறைச்சி ஆகும். இதுவும் ஒருவகைக்குறிப்பு மொழியே. இதனைத் தொல்காப்பியம்.

*இறைச்சி தானே உரிப்புறத் ததுவே*

எனக் கூறுகிறது கவிஞன் தான் கூறக்கருதிய பாடு பொருளோடு ஒத்ததாகக் கூறாமல், அப்பாடுபொருளுக்குப் புறத்தே சிறப்பு உண்டாகுமாறு கூறுவது இறைச்சி ஆகும். தெய்வம் தவிர்ந்த கருப்பொருட்களால் இறைச்சி அமைக்கப்படும். காதலர்களின் ஊர், நாடு போன்றவற்றிற்கு அடையாக இக்கருப்பொருட்கள் வரும். இப்பொருட்களின் செயல்களிலிருந்து கவிதையின் பாடுபொருளினைச் சிறப்பாக உய்த்துணர முடியும்.

## [illegible]

தொல்காப்பியம் தமிழ் இலக்கியக் கொள்கைகளை அறிவிக்கும் பொருட்டு எழுதப் பெற்றுள்ளது. காதல் மனித வாழ்வில் பெற்றிருக்கிற முதன்மை காரணமாக அதனை மையமாகக் கொண்ட அக இலக்கியங்கள் பேரளவில் காணப்படுகின்றன. இலக்கியங்கள் சமூக அமைப்பினால் கட்டுப்படுத்தப்பட்டு, உயிரோட்டம் பெற்றுள்ளன.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116